UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இலக்கியங்களில் விருந்தோம்பல்

**கு. காயத்ரி**
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)

**முனைவர் இரா. தேவகி**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்யகிங்கள் தமிழ் இலக்கியத்தின் கருவூலமாக நிகழ்கின்றன. மனிதனின் வாழ்வை அகமும் புறமாக எடுத்துக்காட்டுகின்றது. மக்களின் வாழ்க்கை நெறியினை அனைத்து இலக்கியங்களும் கூறுவதாயினும் அவை இலக்கியத்திற்கு இலக்கியம் வேறுபடுகிறது. சங்ககாலத் தமிழர்களின் பண்பாட்டில் விருந்தோம்பல் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. விருந்தினர் நமது உற்றார் உறவினர் மட்டுமல்லாமல் எதிர்பாராமல் திடீரென்று பசியால் வருபவரை விருந்தினர் என்று பண்டையக்காலத்தில் கருத்தில் கொள்ளப்பட்டது.

விருந்தினர்கள் முன்பின் தெரிவாதவராக இருப்பினும் அவர்களையும் சிறந்த முறையில் உபசரிக்கும் உயர்ந்த பண்பு தமிழுக்கும் தமிழர்களுக்கும் உண்டு என்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

விருந்தோம்பல் என்பது சங்க கால மக்களின் வாழ்க்கையின் நெறிமுறைகளை ஒன்றாக இணைத்துள்ளாது. இலக்கியங்களில் விருந்தோம்பல் ஆய்வுச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

பண்டையத் தமிழரின் வாழ்வியல் ஆவணமாக இருக்கின்ற சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள விருந்தோம்பல் பண்புகளை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு “இலக்கியங்களில் விருந்தோம்பல்” என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகின்றது.

“விருந்து என்ற சொல்லுக்கு “புதுமை” என்று பொருள். உறவினரும், நண்பரும் இல்லாத புதிய நபர் வீடு தேடி வரும் போது அவர்களை “விருந்தினர்” என்பர். நம் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு உறவினர்களையும் நண்பர்களையும் இன்முகத்துடன் வரவேற்று மகிழ்ச்சியுடன் அன்பாக உபசரித்தல் விருந்தோம்பலின் தலையாயப் பண்பாகும் விருந்தோம்பலின் சிறப்பை

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு”** (குறள்81)[1] என்ற குறள் எடுத்துரைக்கக் காணலாம்.

இல்வாழ்க்கையின் சிறப்பே விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்குவது தான். வீட்டில் இருந்து பொருள்களைக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்கே ஆகும் தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பலின் சிறப்புகளை

இலக்கியங்களின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது மனித நேயத்தின் மறுவடிவமாகும் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில் முதல் இடம் பிடிப்பது உணவே ஆகும்.

நாம் உண்பதோடு மட்டுமல்லாமல் வறுமை யில் வாடும் ஏழை எளியவர்களுக்கும் வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கும் உணவினை வழங்கி அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள் "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"[2] என்று ஔவையார் கூறுகிறார்.

"இட்டு கெட்டவர் யாரும் இல்லை" என்று நம் முன்னோர் குறிக்கும் அளவிற்கு தானமும் தர்மமும் தலைகாக்கும் என்பது நம்முடைய மரபாகும் அதன் வாயிலாக ஈகைப்பண்பும் அடுத்தவர்க்கு உணவளிக்கும் உயரிய மாண்பும் தமிழர் வரலாற்று இலக்கியங்களில் பெரிதும் போற்றிப் பேசுவதைக் காணலாம்.

**விருந்தோம்பல் சிறப்பு**

விருந்தோம்பல் தமிழர் குணங்களில் சிறப்பான ஒன்றாகும் அறங்களில் முதன்மை யான அறமான விருந்தோம்பலை தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன தலைவனும் தலைவியும் பிரிந்து சென்ற விருதததைவிட விருந்தினர் வரவில்லையே என்று வருந்துவார்கள். விருந்தினர் வருவதை எதிர்பார்த்துத் தலைவனும் தலைவியும் காத்திருப்பார்கள் விருந்தில்லாச் சோறு மருந்து என்று குறிப்பிடுவதைப் போல விருந்து முக்கியமான ஒன்றாகக் கருதப் பட்டது. விருந்தினரை மதித்துப போற்றி அகமும் முகமும் மலர உபசரித்து மகிழ்வித் தலே விருந்தோம்பலின் சிறப்பாகும்.

**இலக்கணத்தில் விருந்தோம்பல்**

தொல்காப்பியர் விருந்து என்று சொல்லுக்குப் "புதுமை" என்ற பொருண்மையை

**விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே**

(தொல்-231)[3]

என்றுரைக்கின்றார்.

**"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே**

**வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி"**

(புறம் – 35)[4]

முன் தோன்றிய காலத்தில் இருந்து தமிழ் புரியும் சிறப்பு விருந்தோம்பல் என்பதை

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓப்பலும்**

**பிறவும் அன்ன கிழவோன்**

**மாண்புகள்"** (தொல்-1102)[5]

விருந்தினரைப் பாதுகாத்தலும் சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள் ளதை அறிய முடிகின்றது

**இலக்கியங்களில் விருந்தோம்பல்**

தமிழர்கள் நாகரிகம் பண்பாட்டில் சிறந்து விளங்கியதைப் போல் விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கியுள்ளது "உணவு விடுதிகள் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுக்கும் அனைவரும் செல்லும் ஊர் களையே நம்ப வேண்டியிருந்தது. புதிதாக வருவோருக்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந் தோம்பல் பண்பாடு தமிழகத்தில் உருவாயிற்று"

விருந்தோம்பல் காரணத்தை வைத்து விருந்தினரின் மூலம் தலைவன் தலைவியர் இடையே ஏற்படும் ஊடலும் கூடலுமாக மாறியுள்ளதை

**தட மருப்பு எருமை மட நடைக் குழவி**

**தூண் தொறும் யாத்த காண்தகு நல்**

…… **சிறு முள் எயிறு தோன்ற**

**முறுவல் கொண்ட முகம் காண்கும்மே**

(நற்றி-120)[7]

மருத நில தலைவியின் உடலை விருந்தோம்பல் நீக்கியதாக இப்பாடல் உணர்த்துகிறது

விளையாட்டின் மூலம் சிறுவயது முதலே தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருந்தோம்பல் பண்பை ஊட்டி வளர்த்ததை

**"தொடலை ஆர்வோடு கடல் உடல் ஆடியும்**

**சிற்றில் இழைத்தும் சிறுசோறு."**

(அகம் – 110)[8]

இப்பாடல் மூலம் உணர முடிகிறது

குறுந்தொகையில் நெய்தல் நிலத் தலைவி

தன் தோழியிடம் பலர் வரும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை அடைப்பதற்கு முன்னர் உணவருந்த வரவிருக்கும் விருந்தினர் யாராவது இருக்கின்றார்களா என அறிவிக்குமாறு வினவுகிறாள்.

**புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**
**நள்ளென வந்த நாரில் மாலைப்**
**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ எனவும்**
**வாரார் தோழிநங் காதலோரே**

(குறுந்தொகை - 118)[9]

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது அந்த காலத்தில் வீட்டின் வெளியே திண்ணை வைத்து கட்டியதற்கு காரணமே வழிப் போக்கர்கள் இளைப்பாரி இல்லத்தில் உணவருந்தி செல்வதற்கு என்பதை கீழ்க் காணும் பாடல் மூலம் உணர முடிகிறது

கலித்தொகையில் இயற்கைக்கும் விருந்தளித்ததை

**"இன்னுயிர் செய்யும் மருந்தாகி பின்னிய**
**காதலர் எயிறு எய்க்கும் கண் அருவி**
**நறு முல்லைப்**
**துயர் அறு கிளவியோடு**
**அயர்ந்தகம் விருந்தே"** (கலி 32)[10]

என்ற பாடலில் "பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்ப வரும் நேரம் மகிழ்ச்சி என்பதைத் தெரிவிக்கும் விதமாக இளவேனிற் அமைந்தது என்பதும் அதற்கு விருந்து படைத்தல் வாயிலாக இயற்கைக்கும் விருந்த ளித்த குணமானது இங்கு புலப்படுகிறது"[11]

பெரிய புராணத்தில் விருந்தோம்பலில் உச்சத்தை தொட்டுக் காட்டியுள்ளனர். வீட்டிற்கு வந்த விருந்தினரான அடியவருக் காக எவரும் கொடுக்க முன்வராத தன் மகனை அறுத்துக்கறி சமைத்ததை

**"நாதன் தானும் ஒரு குடிக்கும் நல்ல**
**சிறுவன் ஒரு மகனைத்**
**தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில்**
**தம்மில் மனமுவந்தே**
**ஏதும் இன்றி அமைத்த கறியாம் இட்டுண்பது**
**என மொழிந்தார்"**

(சிறு-நா-புராணம் பா3710)[12]

தன்னுடைய ஒரே ஐந்து வயது மகனை பிள்ளைக் கறிக்காக அர்ப்பணித்ததை அறிய முடிகிறது

ஒரு மழைக்காலத்தில் இரவு நேரத்தில் வந்த சிவனடியாருக்கு விருந்து அளிக்க ஒரு பொருளும் இல்லாத போது தான் முந்திய நாள் வயலில் விதைத்திருந்த நெல்லை வாரி வந்து மனைவியிடம் கொடுத்து உணவு சமைத்து விருந்து அளித்த நிகழ்ச்சியை பெரிய புராணத்தில் இளையான் குடி மாறநாயனார் புராணம் எடுத்துரைக்கிறது.

**"பெருகு வானம் பிறங்கமழை பொழிந்**
**தருகு நாப்பண் அறிவருங் கங்குல் தான்**
**கருகு மையிரு ளின்கணங் கட்டு**
**விட்டுருகுகின்றது போன்ற**
**உலகெல்லாம்"** (இளையான்குடி
மாறநாயனார் புராணம் பா 17,18)[13]

எடுத்துரைக்கிறது

இதனையே மலைகளில் வாழும் குறவர்கள் வரும் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று தாம் சமைத்த மாமிசத்தையும், திணை அரிசி சோற்றையும் அனைவரும் ஒன்றாக உண்ணுவார்கள் பல நாள் உறவு உடையவர் போன்று புதியவர்களையும் ஏற்றுக் கொள்வர் என்பதை

**"நும் இல் போல கேளாது கெழிஇ**
**சேட் புலம்பு அகல இனிய கூறி**
**பரூ உக்குறை பொழிந்த நெய்க்கண்**
**வேலையொடு**
**குரூ உக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்**

(மலைபடு 168)[14]

தாம் உண்ணும் உணவினை எவ்வித தயக்கமுமின்றி வரும் விருந்தினருக்கு உபசரித்து மகிழும் பண்பினை இதன் மூலம் உணர முடிகிறது.

**திருக்குறள் போற்றும் விருந்தோம்பல்**

நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தின ரைப் போற்றுபவர் இல்வாழ்க்கை என்றுமே துன்பத்தால் பாழ்படுவது இல்லை என்பதை,

**"வருவிருந்து வைகலும் ஒப்புவான்**
**வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று"** (குறள் 83)[15]

என்றும்

"வித்தும் இடல் வேண்டும் கொல்லோ
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்" (குறள் 85)[16]

என்றும் குறள் விளக்குகின்றது.

வீட்டுக்கு வந்த விருந்தினரை முதலில்

உணவு உண்ண செய்து மீதி உணவை உண்பவர்கள் நிலத்தில் விதைக்காமலே பயிர் விளையும் என்பதை வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்

**“அகம் மலர்ந்து செய்யாள் உறையும் முகம் உணர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்”** (குறள் 84)[17]

இல்லம் தேடி வரும் புதியவர்களை இன் முகத்துடன் வரவேற்று இனிய சொற்களை கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும்

**சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்**

சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக தரும்போது சாயலன் என்பவனின் மனைவி செய்த நல்வினை குறித்து கூறுகிறார். எட்டி என்ற பட்டத்தினை பெற்ற சாயலனும் அவன் மனைவியும் நோன்பு மேற்கொள்ளும் நோன்பிகளுக்கு உணவு அளிப்பதையே தங்கள் வாழ்க்கையின் முக்கிய கடமையாக செய்து வந்தனர் ஒருநாள் சாயலன் மனைவி முனிவர் ஒருவருக்கு உணவளித்து உபசரிக்கும் இடையில் குரங்கு ஒன்று நம் மனதினுள் புகுந்து முனிவரின் திருவடிகளை வணங்கி அவர் உண்டு எஞ்சிய எச்சில் சோற்றையும் ஊற்றிய நீரையும் உண்டு மகிழ்ச்சி கலந்த விருப்புடன் அவருடைய திருமுகத்தை நோக்கியது

**“எட்டி சாயலன் இருந்தோன் தனது**
**பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில், ஓர்**
**மாதவ முதல்வனை மனைப் பெருங் கிழத்தி**
**ஏதம் நீங்க எதிர்கொள் அமயத்து”**[18]
(சிலப் அடைக்கலக்காதை 163-166)

இல்லறத்தார் முனிவர்களுக்கு விருந்தளிப்பதை உணர்த்துகின்றது

**மணிமேகலையில் விருந்தோம்பல்**

அறுசுவை உணவு கச்சிமா நகர்ப்புக்கு காதையில் மன்னவன் சாரணர்களுக்கு உபசரிக்கும் முறையைச் சாத்தனார்.

**“ஆசனத்து ஏற்றி அறுசுவை நால்வகை”**[19]
(மணி காஞ்சி பு.கா 241)

அறுசுவையான கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு, என்றும் நால் வகை அமிர்தமாவன உண்பன, திண்பவன, நக்குவன, பருகுவன, என்றும் விளக்கம் தருகின்றது இவ்விளக்கத்தால் மணிமேகலை கால சமுதாயத்தில் அறுசுவையோடு கூடிய உணவும் நான்கு வகையான அமிர்தமும் சிறப்பாக அளிக்கப்பட்டன என்பது அறிய முடிகின்றது

**சீவக சிந்தாமணியில் விருந்தோம்பல்**

வெள்ளி அடுப்பிலே நறை கொடியும் தூவியெரிக்கும் புழுகும் மணக்கும் நல்ல மணமுறு விறகினாலே அழகிய பொற்கலத்தில் நிறைய சமைத்த நெய்க்கலந்த இனிய சோற்றை அங்கு வாழும் மக்கள் விருந்தோடு உண்பார்கள்

**“நறையு நானமு நாறு நறும்புகை**
**விறகின் வெள்ளி யடுப்பினம் பொற்கல**
**நிறைய வாக்கிய நெய்பயில் இன்னமு**
**துறையு மாந்தர் விருந்தொடு முண்பவே”**[20]
(சீவகசிந்தாமணி நா மகள் இல்பகம் 131)

இவ்வாறு ஏமங்க நாட்டு மக்களின் விருந்தோம்பல் பண்பு சிறந்து விளங்கியது

**பெரியபுராணத்தில் முனிவர்களுக்கு உணவளித்தல்**

அறுபத்துமூன்று நாயன்மார்களில் இளையான் குடி மாறனாயனார், சிறுதொண்ட நாயனார் இயற்கைநாயனார், காரைக்கால் அம்மையார் போன்றோர் சிவனடியார்களுக்கு உணவளித்ததை பெரிய புராணம் மூலம் அறிய முடிகிறது

**கம்பராமாயணத்தில் விருந்தோம்பல்**

கம்பராமாயணத்தில் பலரும் விருந்தளித்து சிறப்பித்துள்ளனர். விருந்திடும் பண்பை காப்பியத்தில் பல இடங்களிலும் சொல்லிச் சென்றுள்ளார் கம்பர் நாட்டு வருணனையிலும் மக்கள் வாழ்வியல் பற்றி வருணிக்கும் போதும் கதாபாத்திரங்கள் வாயிலாகவும் விருந்தினர் முகம் கண்ட நாளே விழா நாளாக எண்ணப்பட்டது. விருந்தினரை வரவேற்பதற்காகவே மங்கள வள்ளைகள் வீடு தோறும் விளங்கிக் கொண்டிருந்தன.

**உரோம பாதன் தசரதனுக்கு அளித்த விருந்து**

வசிஷ்டர் அறிவுரைப்படி தசரதன், உரோமபத முனிவரைக்கண்டு கலைக்கோட்டு முனிவர் மூலமாக புத்திர காமேஸ்டி யாகம் செய்ய விரும்பி அவரை அழைக்க வந்த போது அவருக்கு வேண்டிய உபச்சாரங்களை

மனமகிழ்ந்து ஏற்றுக் கொண்டான்.

**“ஏடு துற்ற வடிவலோன் தனை இருத்தி**
**கடன் முறைகள் யாவும் நேர்ந்து**
**தோடு துற்ற மலர்த் தாரான் விருந்து அளிப்ப**
**இனிது உவந்தான் சுரர் நாடு ஈந்தான்”**[21]

(திரு.அவதாரப் படலம் 241)

**கௌதம முனிவர் விசுவாமித்திரருக்கு விருந்தளித்தல்**

ராமன், இலக்குவன், விசுவாமித்திரர் மூவரும் கௌதம முனிவர் ஆசிரமத்தை அணுகினர். உடனே கௌதமமுனிவர் சிறிதும் எதிர் பாராது விருந்தினரைக் கண்டு வியப்புற்று அன்போடு எதிர் கொண்டு வரவேற்றால் விருந்தினரை உபசரிக்க வேண்டிய கடமைகளைக் குறைவின்றி செய்தான்

**“அருந்தவன் உறையுள் தன்னை அனையவர் அணுகலோடும்**
**விருந்தினர் தம்மை காண மெய் முனி வியந்த நெஞ்சான்”**[22]

(அகலிகைப்படலம் 483)

**குகன் அளித்த விருந்தோம்பல்**

தூய உள்ளமும் தாயினும் நல்லான் குகன் ராமனுக்கு உணவாக விருந்து படைக்க திருந்திய மீனையும் தேனையும் கொணர்ந்து விருந்தாக உபசரித்தான்.

**“இருந்தி ஈண்டு என்னவேலடும் இருந்திலன் எல்லை நீத்த**
**அருந்தியவன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்**
**திருத்தினென் கொணர்ந்தேன் என் கொல் திருஉளம் என்ன வீரன்**
**விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான்”**[23] (குகப்படலம் 649)

**அகத்தியர் அளித்த விருந்து**

இராமன் அகத்தியர் வாழும் சோலைக்குச் சென்றபோது அகத்தியர் ராமனுக்குப் பிடித்த மான உணவினை விருந்திட்டார். அதன் பிறகு ராமன் சோலையில் மகிழ்ச்சியுடன் இருந்தான் என்பதை

**“விருந்து அவன் அமைத்த பின் விரும்பினன் விரும்பி”**[24](அகத்தியப்படலம் 164) எடுத்துரைக்கின்றது.

**அற இலக்கியத்தில் விருந்தோம்பல்**

அற இலக்கியங்கள் கிபி 100 கிபி 500 இடைப்பட்ட காலத்தில் தோன்றியவையாக குறிப்பிடுவர் உலகில் உள்ள. தொன்மை மிகப் பழங்குடியில் தங்களுக்கெனச் சில பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் போன்ற வற்றைப் பெற்றுள்ளனர்

சங்க இலக்கியத்தில் காலத்திற்குப் பிறகு வரும் அற இலக்கியங்கள் காலத்திலும் விருந்தோம்பல் பற்றிய செய்திகள் அதிகமாகப் போற்றப்படுகிறது

**நாலடியாரில் விருந்தோம்பல்**

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் நாலடியார் வைத்துப் போற்றப்படுகிறது நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற திருக்குறளோடு ஒப்பவைத்து எண்ண பெறும் பெருமைக்குரியது. எழையர் மற்றவரை விருந்துக்கு அழைத்து வீட்டில் துணைவியை கொண்டு. உணவு பரிமாற செல்வர். செல்வந்தரோ அவ்வாறு செய்வ தில்லை காரணம் ஏழையரை அழைத்து அவர்தம் வீட்டில் தம் துணையாரைக் கொண்டு உணவு பரிமாறினால் துணைவியை காணவே கற்பழியும் என கருதி வீட்டு வெளியிலே வைத்து சோறு போடுவார். எனவே செல்வந்தர் விருந்தோம் பலை கைவிடுதல் நன்று என்று நாலடியார் குறிப்பிடுகின்றது இதனை

**“யாம் ஆயின் எம் இல்லம் காட்டுதும் தாம் ஆயின்**
**காணவே கற்பு அழியும் என்பார் போல் நாணி**
**புறங்கடை வைத்து ஈவர் சோறும் அதனால்**
**மறந்திரக செல்வர் தொடர்பு”**[25]

(நாலடியார் 30)

என்ற பாடல் மூலம் அறியலாம்

**நான்மணிக்கடிகையில் விருந்தோம்பல்**

விளம்பிநாகனார் நான்மணிக்கடிகையில் விருந்தோம்பல் பற்றிய கருத்துக்களை சிறுசிறு குறிப்புகளாக கொடுத்திருக்கின்றார் விருந்தோம்பலுக்கு அன்புணர்ச்சியே அடிப் படையாகும். அன்பற்றவர் முன்பு சென்ற விருந்தினர் முகம் தளர்ந்து வாட்டமடைவர் இதனை

**“நன்றி சாம் நன்று அறியாதார் முன்னர் சென்ற**
**விருந்து விரும்பிலால் முன் சாம்”**[26]

(நாண்மணி கடிகை 44)

என்ற பாடல் அடிகள் குறிப்பிட்டு செல்கிறது இன்முகத்துடன் உணவளித்தால் விருந்து சிறப்படையும் இலையில் உணவு பொருட் களை பரப்பி இன்முகத்துடன் உணவு அளிக்கும் போது விருந்தினர் மனம் மகிழ்வர் என்கிறது நான்மணிக்கடிகை

**“கன்று ஊட்ட நந்தும் கறவை கலம் பரப்பி**
**நன்று ஊட்ட நந்தம் விருந்து”**[27] (நா.க 60)

என்ற பாடல் அடியின் வழியால் அறியலாம்

**இனியவை நாற்பதில் விருந்தோம்பல்**

பூதஞ்சேந்தனார் இனியவை நாற்பதில் விருந்தோம்பல் பற்றிய பண்புகளைக் கூறியுள்ளார். ஒருவன் பசியால் தன் உயிர் இழக்கும் நிலையில் தவித்தாலும் உண்ண தகாதவர் கை உணவை உண்ணக்கூடாது இதனை

**“உயிர் சென்று தான் படினும் உண்ணால் கைதுண்ணப்**
**பெருமைபோற் பீடுடையது இல்”**[28] (இனி நா 21)

என்னும் பாடல் அடியால் அறியலாம்

**இன்னா நாற்பதில் விருந்தோம்பல்**

கபிலர் இன்னா நாற்பதில் அந்தணர் வீட்டில் விருந்துண்பால் துன்பத்தைத் தரும் என்கிறார்

**“அந்தணர் விருந்தூண் இன்னா”**[29]
(இன் நா 1)

என்றும் பகுத்துண்ணும் தன்மையில்லாத வரிடத்தில் சென்று உணவை உண்ணுதல் துன்பத்தைத் தரும் என்கிறார் இதனை

**“பார்த்து உணல் இல்லா ருழைச் சென்று உணல்**
**இன்னா”**[30] (இன் நா 21)

என்ற அடிகள் மூலம் தெளிவுபடுத்துகிறார்

**பழமொழியில் விருந்தோம்பல்**

செல்வச் செழிப்புடையவர் மிகுந்த ஏழை வீட்டிற்கு விருந்தினராக செல்வதை கை விடுதல் வேண்டும் ஏனெனில் ஏழை செல்வந்தர் நிலை கருதி தன் எல்லை கடந்து விருந்து ஒம்புவதால் துன்புறுவர் என்னும் செய்தி

**“நல் கூர்ந்தவருக்கு நனி பெரியார் ஆயினர்**
**செல் விருந்து ஆகிச் செலல் வேண்டா ஒவ்வது**
**இறந்து அவர் செய்யும் வருத்தம் குருவி**
**குறங்கு அறுப்ப சோரும் குடர்”**[31] (பழ 100)

என்ற பாடலில் பளிச்சிடுகிறது

**ஆசாரக்கோவையில் விருந்தோம்பல்**

பெருவாயின்முள்ளியார் ஆசாரக்கோவையில் விருந்தோம்பலை ஒழுக்கத்தின் அடிப்படை யில் வலியுறுத்துகிறார் என்றும் ஒழுக்கத்தில் தவறாதவர் விருந்தினர் வயதினால் மூத்தவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள், ஆகியவர் களுக்கு உணவுப்பொருட்களைப் பகுத்துக் கொடுத்து உண்பர் இதனை

**“விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை**
**இவர்க் கூண் கொடுத்த தல்லால் லுண்ணரேயென்றும்**
**ஒழுக்கம் பிழையா தவர்”** (ஆசா கோவை 21)

என்ற பாடல் வழியைக் குறிப்பிட்டு செல்கிறார்

**சிறுபஞ்ச மூலத்தில் விருந்தோம்பல்**

பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் தன்னிடம் உள்ள உணவுப் பொருட்களைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து பின்பு எஞ்சியதைத் தான் உண்பவன் நீண்ட நாள் வாழ்வான் இதனை

**“பஞ்சபொழுது பார்த்துண்டான் காவாதான்**
**அஞ்சா துடை படையுட் போந் தெறிவான் எஞ்சாது**
**உண்பது முன் ஈவான் குழவி பலி கொடுப்பான்**
**எண்பதில் மேலும் வாழ்வான்”**[33] (சிறு ப.79)

என்று பாடலில் வழியாக அறியலாம்

**ஏலாதியில் விருந்தோம்பல்**

ஏலாதியில் விருந்தோம்பல் தமிழ் பண்பாடு நோக்கில் இடம் பெற்றுள்ளது எனலாம். ஏனெனில் நாள்தோறும் விருந்தினர்களாக வருபவர்களுக்கு இன்சொல் கூறி வரவேற்றல் மனம் கலந்த அன்பை காட்டுதல், தங்கும் இடம் கொடுத்தல், ஆடை, உணவு முதலானவற்றை அன்புடன் வழங்குதல் இன்சொல் கூறல் இவற்றை செய்பவரை தேவர் தாம் விருந்தினராக ஏற்றுக்கொள்வார் இதனை

**“இன்சொல் அளாவல் இடமினிதூண் யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் மென்சொல்**

முருந்தேய்க்கும் முள்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து”[34]
(ஏலாதி 7)

என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

**முடிவுரை**

விருந்தோம்பல் என்பது பண்டையத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களில் மிகவும் இன்றியமையாததாகும். மனித நேயத்தின் மற்றொரு வடிவமாக விளங்கும் இப்பண்பானது தமிழர்களின் பொதுநலம் போற்றும் பண்பையும் உறவினரல்லாத புதியவர்களுக்கும் உணவு அளித்து விருந்தோம்பல் செய்வதே வாழ்வியல் அறமாகவே கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**சான்றேன் விளக்கம்**

1. திருக்குறள் 81
2. ஔவையார் கொன்றை வேந்தன் நீதி நூல்
3. தொல்காப்பியம் 231
4. புறநானூறு 35
5. தொல்காப்பியம் 1102
6. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் முனைவர் பத்மபிரியா
7. நற்றினை 120
8. அகநானூறு 110
9. குறுந்தொகை 118
10. கலித்தொகை 32
11. இலக்கியங்கள் போற்றும் விருந்தோம்பல் முனைவர் மூ.சிந்து
12. சிறுத்தொண்டர் நாயனார் புராணம் 3710
13. இளையான்குடி மாறநாயனார் புராணம் 17,58
14. மலைபடுகடாம் 168-169
15. திருக்குறள் 83
16. திருக்குறள் 85
17. திருக்குறள் 84
18. சிலப்பதிகாரம் (அடைக்கலக்காதை) 163-166
19. மணிமேகலை (காஞ்சி புக்க காதை) 241
20. சீவகசிந்தாமணி (நாமகள் இலம்பகம்) 131
21. கம்பராமாயணம் (திரு அவதாரப் படலம்) 241
22. அகலிகைப் படலம் 483
23. குகப்படலம் 649
24. அகத்தியப் படலம் 164
25. நாலடியார் 30
26. நான்மணிக்கடிகை 44
27. நான்மணிக்கடிகை 60
28. இனியவை நாற்பது 21
29. இன்னாநாற்பது 1
30. மேலது 21
31. பழமொழி நானூறு 100
32. ஆசாரக் கோவை 21
33. சிறுபஞ்சமூலம் 79
34. ஏலாதி 7

**துணைநூற்பட்டியல்**


1. திருக்குறள், திருவள்ளுவர், சைவசித்தாந்த பதிப்பு 1924
2. கொன்றை வேந்தன், ஔவையார் உலகத் தமிழ் கல்விக்கழகம், சென்னை
3. புறநானூறு, புலியூரி கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600 004
4. தொல்காப்பியம் (பொ) திருஞான சம்பந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு
5. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் முனைவர் பத்மபிரியா கட்டுரை,
6. நற்றினண, அ.ப பாலையன், கௌரா பதிப்பகம், சென்னை
7. அகநானூறு, புலியூரி கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600 004
8. நான்மணிக்கடிகை, சாமிசிதம்பரனார் சாரதா பதிப்பகம், சென்னை 600 004
9. சிறுத்தொண்டர் நாயனார் புராணம், சுப்பிரமணிய முதலியார் கோவைத் தமிழ்ச்சங்கம், கோயம்புத்தூர், 1958
10. சிலப்பதிகாரம் மூலமும் உரையும், வே. சாமிநாதையர் கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை 1920
11. சீவகசிந்தாமணி, சு.துரைச்சாமிப்பிள்ளை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்1941
12. கம்பராமாயணம், ச.வே சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பு, சென்னை 800 108
13. நாலடியார், ப.அறவாணன் தமிழ்க் கோட்டம், சென்னை
14. இன்னா நாற்பது, இனியவை நாற்பது, துரை.தண்டபாணி, உமா பதிப்பகம் சென்னை,
15. பழமொழி நானூறு, புலியூரி கேசிகன், ஸ்ரீ செண்பக பதிப்பகம், சென்னை 2010
16. ஆசாரக் கோவை, ச.குருஞாணாம்பிகா விஜயா பதிப்பகம், சென்னை